2026  ஆகஸ்ட்  மாதம் 12– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர்  :  4/2025

2026–ஆம் ஆண்டு  ஆகஸ்ட்  மாதம் 12– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW7 (LW8) –  ஈஸ்வரன் |
| தகப்பனார் பெயர்: | ராஜா |
| ஊர்: | சின்ன ஓவுலாபுரம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 47 |

12.08.2026

(எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு, அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு  ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம், தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்ன ஓவுலாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 எனக்கு தெரியும். 27.02.2024 ம் தேதி இரவு 12.00 மணிக்கு மேல் சின்ன ஓவுலாபுரம் கிராமத்தில் இருந்து தெற்கு பக்கம் 1/2 கி.மீ தள்ளி உள்ள எனது தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச சென்றேன்.  மொக்கைப்பாண்டி வீட்டின் முன்னால் போலீசார் விசாரணை செய்து, படம் வரைந்து கொண்டிருந்தார்கள்.

2. அங்கு போலீசார் ரத்தம்படிந்த சிமிண்ட் தரை சிறிதளவு மற்றும் இரத்தம்படியாத சிமிண்ட் தரை சிறிதளவு ஆகியவற்றை என் முன்னிலையிலும், சாட்சி முருகன் முன்னிலையிலும் கைப்பற்றினார்கள். அந்த இரத்தம்படிந்த சிமிண்ட் தரை மற்றும் இரத்தம்படியாத சிமிண்ட் தரை தற்போது நீதிமன்றத்தில் உள்ளவையாகும். அவை முறையே **அ.சா.பொ.3** மற்றும் **அ.சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னிடமும், முருகன் என்பவரிடமும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**</u>

3. நான் என்ன தெருவில் வசித்து வருகிறேன் என்றால் இந்திரா காலணியில் வசித்து வருகிறேன். சம்பவ இடம் எந்த தெரு என்றால் ஐயப்பன் கோவில் தெருவாகும். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன இருந்தது என்றால் சம்பவ இடத்தை பார்வையிட்டதாகவும், படம் வரைந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் கையொப்பம் செய்த தாளில் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். அ.சா.1 மொக்கைப்பாண்டி என்ன உறவுமுறை என்றால் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர் ஆவார். பார்வை மகஜர் தயார் செய்தபோது எத்தனை போலீசார் இருந்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் மற்றும் 4, 5 ஆண்காவலர்கள் இருந்தார்கள். போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் கையொப்பம் செய்தபோது விசாரித்தார்கள், அதன்பின்பு விசாரிக்கவில்லை.

4. நான் சொன்னவாறு போலீசார் பார்வை மகஜர் தயார் செய்த இடத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும், அ.சா.1 எனது உறவினர் என்பதால்

அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் உள்ள மொக்கைப்பாண்டி வீட்டின் நான்குமால் என்ன என்றால் கிழக்குப் பக்கம் சந்து முடியும் இடம், தெற்கு பக்கம் சந்து, மேற்குப்பக்கம் ராஜேந்திரன் வீடு, வடக்கே மாயாண்டி பொதுச்சுவர் ஆகும்.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 12.08.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.12 13:11:49 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
12.08.2026